காக்கும் பணியில் 100 ஆண்டுகள்

Fire Loss is National Loss
Let us adopt Fire Safety Measures

வாய்மையே வெல்லும்

# தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை
## தீயணைப்பு - மீட்புப் பணிகள் நிலையம், தேர்வாய் கண்டிகை - சிப்காட்

## தடையின்மைச் சான்று

ந.க. எண் : **440/V/TVKS/2025** நாள் : **14.08.2025**

பொருள் : தீயணைப்பு - மீட்புப்பணித்துறை-தேர்வாய் கண்டிகை -சிப்காட் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையம் - பள்ளிக்கூடம் நிறுவிட/பள்ளிக் கூடத்திற்கு அங்கீகாரம் வழங்கிட தடையின்மை சான்று வழங்குதல் - குறித்து.

பார்வை :
1. அரசு ஆணை எண்.122, பள்ளிக் கல்வி (2) துறை நாள் : 14.09.2004.
2. அரசு ஆணை எண்.123 பள்ளிக் கல்வி (2) துறை நாள் : 14.09.2004.
3. அரசு ஆணை எண்.117 பள்ளிக் கல்வி (2) துறை நாள் : 14.09.2004.
4. நிர்வாகி, G.T.வித்யா மந்திர் பள்ளி,வடமதுரை கிராமம், எர்ணாகுப்பம் மதுரா ஊத்துக்கோட்டை வட்டம், அவர்களிடமிருந்து பெறப்பட்ட விண்ணப்பம் நாள் : 12.08.2025.

- - - - -

பார்வையில் காணும் அரசினர் ஆணை மற்றும் விண்ணபத்தின்படி எர்ணாகுப்பம் மதுரா, வடமதுரை கிராமம், ஊத்துக்கோட்டை வட்டம், திருவள்ளூர் மாவட்டம் என்ற முகவரியில் நிறுவப்பட்டுள்ள **"G.T.வித்யா மந்திர் பள்ளி"** என்ற பள்ளியினை 13.08.2025 அன்று நிலைய அலுவலர் திரு.**E.முத்து** என்பவரால் ஆய்வு செய்யப்பட்டது. இவ்விடத்தில் பள்ளிக்கூடம் நிறுவிட / பள்ளிக் கூடத்திற்கு அங்கீகாரம் வழங்கிட தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை நோக்கிலிருந்து யாதொரு தடையும் இல்லை எனச் சான்றிடலாகிறது.

### நிபந்தனைகள்

1. இந்த தடையின்மைச் சான்று வழங்கப்பட்ட நாளிலிருந்து மூன்று ஆண்டுகளுக்கு மட்டும் செல்லத் தக்கதாகும். பின்னர் புதுப்பிக்கப்பட வேண்டும்.
2. இந்திய கட்டிட விதித் தொகுப்பு 2005 Part IV (தீ மற்றும் உயிர்காப்பு) இந்தியா தர நிர்ணயம் மற்றும் பிற அரசு விதிகளின்படி தீயணைப்பு மற்றும் உயிர் காப்பு சாதனங்கள் அமைப்புகள் ஆகியவை நல்ல முறையில் எந்த நேரமும் உபயோகிக்கத்தக்க நிலையில் வைத்து பராமரிக்க வேண்டும்.
3. பள்ளியில் பணிபுரியும் பாதுகாப்பிற்கு பொறுப்பு வகிக்கும் நிரந்தர பணியாளர்கள் மற்றும் பாதுகாப்பு பணியாளர்கள் அரசாணை எண்.713 உள்காவல் 17 துறை நாள் 17.08.2005ன்படி கட்டண அடிப்படையில் தீயணைப்பு மீட்பு பணி துறையிடம் ஆரம்ப தீத்தடுப்பு பயிற்சி பெற்றிருக்க வேண்டும்.
4. காலமுறையாக அருகில் உள்ள தீயணைப்பு மீட்பு பணி நிலையத்துடன் இணைந்து அவசர கால போலி ஒத்திகை பயிற்சி (Mock Drill) நடத்தப்பட வேண்டும்.
5. அவசர காலங்களில் தீயணைப்பு சாதனங்களை இயக்கத்தக்க வகையில் பயிற்சி பெற்ற தீயணைப்பு பணியாளர்கள் அனைத்து நேரங்களிலும் பணியில் நியமனம் செய்ய வேண்டும். பள்ளியில் உள்ள ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் உயிர் காப்பு சாதனங்களை அனைத்து நேரங்களிலும் பயன்படுத்தும் வகையில் நல்ல முறையில் பராமரிக்க வேண்டும்.

**தேதியுடன் கூடிய அலுவலக முத்திரை**

தீயணைப்பு மீட்பு பணிகள் நிலையம் திருவள்ளூர் வட்டம்
14 AUG 2025
தேர்வாய் கண்டிகை - சிப்காட்

14/8/2025
நிலைய அலுவலர்
தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் நிலையம்
தேர்வாய் கண்டிகை (சிப்காட்)

பெறுநர்

நிர்வாகி,
**G.T.வித்யா மந்திர் பள்ளி**
எர்ணாகுப்பம் மதுரா, வடமதுரை கிராமம்,
ஊத்துக்கோட்டை வட்டம்,
திருவள்ளூர் மாவட்டம்

நகல்:

**மாவட்ட அலுவலர்,**
தீயணைப்பு மீட்பு பணிகள் துறை,
திருவள்ளூர் மாவட்டம்.